# மெட்ரோ ரயில் சேவை குறைப்பு

**சென்னை, மே 1–**

இம்மாதம், அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளிலும், மெட்ரோ ரயில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக, அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்தின் சார்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழகத்தில், ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு அமல்படுத்தப்படுவதை அடுத்து, இம்மாதம் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும், காலை, 7:00 மணியில் இருந்து, இரவு, 9:00 மணிவரை மட்டுமே மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

இதன்படி, விம்கோ நகர் – விமான நிலையம் இடையே, 1 மணி நேர இடை வெளியிலும், சென்னை எம்.ஜி.ஆர்., சென்ட்ரலில் இருந்து, கோயம்பேடு, வழியாக விமான நிலையத்துக்கு, 2 மணி நேர இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும். எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் நிலையத்தில் இருந்து, கோயம்பேடு வழியாக, பரங்கிமலைக்கு, 2 மணிநேர இடைவெளியில் ரயில் இயக்கப்படும். பயணியருக்கு கொரோனா தொற்று பரவாமலிருக்க ,உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.